## 03. அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலம் நீடிக்கப்படுதல் (காணி அபிவிருத்தி மற்றும் கட்டிடங்களின் நிருமாணிப்பு) செயல்வழிப்படம்

டிஜிரல்மயமாக்கல் தரவுகளைப் பயன்படுத்தல்

இலத்திரனியல் செய்திகள்/பரிவர்த்தனைகள் (SMS / WhatsApp / e-mail)

சபையின் இணையத் தளம் ஊடாக அல்லது முன்னலுவலகத்தில் விண்ணப்பம் பெற்றுக்கொண்டு உரிய இணைப்புகளுடன் ஒப்படைத்தல்

பொறுப்பு : விண்ணப்பத்தாரி

இணைப்புகளுடன் கூடிய விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்பட்டு செயலாக்க கட்டணம் அறவிடல் மற்றும் தொடர் நடவடிக்கை

பொறுப்பு: முன்னலுவலக அலுவலர்

இணைப்புகளுடன் விண்ணப்பப்படிவம் விடய பொறுப்பு

பொறுப்பு: முன்னலுவலக அலுவலர்

வேண்டுகோளுக்கு உரியதான ஆரம்ப கோவையுடன் இணைப்புகள் சகிதம் விண்ணப்பப்படிவம் தொழில்நுட்ப

பொறுப்பு: முன்னலுவலக அலுவலர்

வேண்டுகோள் தொடர்பாக தமது அவதானிப்புகளுடன்

பொறுப்பு: தொழில்நுட்ப அலுவலர்

வேண்டுகோள் தொடர்பாக தீர்மானிக்கப்படுதல்

பொறுப்பு: திட்டமிடல் குழு

செல்லுபடியான காலம் நீடிக்கப்பட்டதா?

ஆம்

அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலம் நீடிப்பதை அறிவித்தல் மற்றும் இணைப்புகளில் குறிப்பிடப்பட்டு அதற்கு அதிகாரம் பெற்ற அலுவலரின் கையொப்பம் பெற்றுக்கொள்ளுதல்

பொறுப்பு: விடயபொறுப்பு அலுவலர்

உரிய ஆவணங்களை முன்னலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவை தொடர்பாக

பொறுப்பு: விடயபொறுப்பு அலுவலர்

உரிய ஆவணங்களை

பொறுப்பு: திட்டமிடல் குழு

இல்லை

அங்கீகரிக்கப்படாமைக்கான காரணங்களை குறிப்பிடப்படும் கடிதத்துடன், இணைப்புகளை முன்னலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டு விண்ணப்பத்தாரியை அறிவுறுத்தல்

பொறுப்பு: விடயபொறுப்பு அலுவலர்

குறைப்பாடுகள் அறிவித்திருப்பின், அவற்றை செவ்வைப்படுத்தி அறிக்கையிடல்

பொறுப்பு : விண்ணப்பத்தாரி

செயலாற்றுகை சுட்டி



03.அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலம் நீடித்தல்
...ங்களின் கட்...

1.

உள்ளூர் அதிகார சபை பிரதேசமொன்றில் மேற்கொள்கின்ற எந்தவொரு வகையிலுமான கட்டுமானங்களுக்காக அல்லது காணி உபபிரிவிடலுக்காக வழங்கிய கட்டுமான அனுமதிப்பத்திரம் அல்லது அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலம் ஓராண்டுக்கு மட்டும் ஏற்புடையதாகும்.. அந்த அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலப்பகுதிக்குள் ஏற்புடைய கட்டுமானங்கள் அல்லது அபிவிருத்தி பணிகள் என்பன முடிவுறுத்தப்பட்டு இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

எவரேனுமொரு நபருக்கு ஓராண்டு காலப்பகுதியில் ஏற்புடைய கட்டுமானங்களை முடிவுறுத்துவதற்கு அல்லது அபிவிருத்தி அலுவல் முடிவுறுத்துவதற்கு முடியாது போயின், குறித்த அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலம் மேலும் ஓராண்டுக்கு நீடிக்கப்படலாம். அவ்வாறு நீடிக்கப்பட்ட காலப்பகுதியிலேனும் ஏற்புடைய கட்டுமானங்களை முடிவுறுத்துவதற்கு அல்லது அபிவிருத்தி பணி முடிவுறுத்துவதற்கு முடியாது போயின், இரண்டாவது முறையாகவும் மேலும் ஓராண்டுக்கு செல்லுபடியான காலம் நீடித்துக்கொள்வதற்கு விண்ணப்பத்தாரியிடம் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏதேனுமொரு காரணத்தால் அதன் பின்னரும் குறித்த அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலம் நீடிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன், இரண்டாவது நீடிப்பு காலம் முடிவடைந்த பின்னர் உரிய கட்டுமான அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.

இரத்துச் செய்யப்பட்ட கட்டுமான அனுமதிப்பத்திரத்திற்கு உரிய கட்டுமானம் அல்லது அபிவிருத்தி பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு எவரேனுமொரு நபருக்கு தேவைப்படுமாயின், மீண்டும் விண்ணப்பம் செய்து புதிய கட்டுமான அனுமதிப்பத்திரம் அல்லது புதிய அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்..

குறிப்பு:- இங்கு காணி உபபிரிவிடல் என்பதில் பொருள்படுவது யாதெனில், ஏதேனும் காணியினைப் பிரித்து ஒதுக்குதல் அல்லது இரண்டு காணித் துண்டுகள் அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையில் இணைத்தல் அல்லது காணி அபிவிருத்தி செய்தலாகும்.

## 2. சட்டத்துடனான அதிகாரம்

1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தில், 8 ஏ பிரிவடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2021 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபை திட்டம் மற்றும் அபிவிருத்தி கட்டளைகளில் 3 ஆவது மற்றும் 30 ஆவது கட்டளைகளாகும்.

## 3. தகைமைகள்

உள்ளூர் அதிகார சபையால் வழங்கிய அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலம் முடிவடைவதற்கு அண்மித்திருத்தல் மற்றும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கிய திகதி தொடக்கம் மூன்று ஆண்டு காலப்பகுதியை கடந்திருக்காமை.

## 4. கட்டணம்

(அ) விண்ணப்பப்படிவத்தின் கட்டணம் ரூபா. ……………. ஆகும். உள்ளூர் அதிகார சபையால் இந்தக் கட்டணம் அவ்வப்போது மாற்றப்படலாம்.

குறிப்பு: உள்ளூர் அதிகார சபையால் இந்தக் கட்டணம் அச்சீட்டு செலவினங்களைத் தீர்த்துக் கொள்வதற்கு மட்டும் ஏற்புடையதாகும் வகையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நகர அபிவிருத்தி பிரதேசத்தில் மேற்கொண்ட ஏதேனும் கட்டுமானத்திற்கு அல்லது காணி உபபிரிவிடலுக்கு ஏற்புடையதாக செல்லுபடியான காலம் நீடிக்கையில் அறவிடப்படும் செயலாக்க கட்டணம் 2021 ஆம் அண்டில் நகர அபவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றம் அபிவிருத்தி கட்டளைகள் 02 ஆவது அட்டவணையில் குறிப்பிடுகின்ற வகையில் அமைதல் வேண்டும்..

குறிப்பு: நகர அபிவிருத்தி பிரதேசத்திற்கு ஏற்புடையதாக இந்த கட்டணம் மாற்றம் செய்வதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கான அதிகாரம் நகர்சார் அபிவிருத்தி விடய பொறுப்பு அமைச்சரிடம் உள்ளபடியால், அவ்வப்போது மேற்கொள்கின்ற திருத்தங்கள் தொடர்பாக கவனமாக இருத்தல் முக்கியமாகும். இந்த கட்டணங்களின் சுழற்சி முறையினைப் பொது மக்கள் பரிசீலனை செய்வதற்கு முடியுமான வகையில் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 5. சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

நகர அபவிருத்தி பிரதேசத்திற்கு ஏற்புடையதாகும் இசைவுச் சான்றிதழாகுமிடத்து அபிவிருத்தியன் இயல்பின் படி ஏற்புடையதாகும் விண்ணபப்படிவம், 2021 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளைகளில் 1 ஆவது அட்டவணையில் “ஈ” படிவத்துடன் அதன்மூலம் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## 6. விண்ணப்பம் செய்தல் மற்றும் இசைவுச் சான்றிதழ் வழங்கும் திட்டம்.

| நடைமுறைத்திட்டம் | காலவெல்லை | அதிகாரம் |
|---|---|---|
| சபையின் இணையத் தளம் அல்லது முன்னலுவலகத்திலிருந்து விண்ணபப்படிவம் பெற்றுக்கொண்டு ஒப்படைத்தல் | | விண்ணபத்தாரி |

| நடைமுறைத்திட்டம் | காலவெல்லை | அதிகாரம் |
|---|---|---|
| இணைப்புகளுடனான விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்று செயலாக்க கட்டணம் அறவிடல், பற்றுச்சீட்டு மற்றும் தொடர் நவடிக்கை இலக்கம் வழங்குதல் | விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் | முன்னலுவலக அலுவலர் |
| விண்ணப்பப்படிவத்தை விடயபொறுப்பு அலுவலரிடம் அனுப்பி வைக்கப்படுதல் | விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் | முன்னலுவலக அலுவலர் |
| வேண்டுகோளுக்கு ஏற்புடையதான ஆரம்பக் கோவை மற்றும் வேண்டுகோளைத் தொழில்நுட்ப அலுவலரிடம் ஒப்படைத்தல் | வேண்டுகோள் தம்மிடம் கிடைத்தவுடன் | விடயபொறுப்பு அலுவலர் |
| வேண்டுகோள் தொடர்பில் தமது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றுடன் கோவையை திட்டமிடல் குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக விடயபொறுப்பு அலுவலரிடம் அனுப்பி வைக்கப்படுதல் | விண்ணப்பப்படிவம் தம்மிடம் கிடைக்கப்பெற்ற திகதி தொடக்கம் இரண்டு நாட்களுக்குள் | திட்டமிடல் அலுவலர் |
| தொழில்நுட்ப அலுவலரின் பரிந்துரை சகிதம் வேண்டுகோளைக் கவனத்தில் கொண்டு அங்கீகரித்தல் | உறுதிச் செய்யப்பட்டுள்ள திட்டமிடல் குழுத் திகதியில் | திட்டமிடல் குழு |

| நடைமுறைத்திட்டம் | காலவெல்லை | அதிகாரம் |
|---|---|---|
| அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலம் நீடிக்கப்பட்டதாக இணைப்புகளில் குறிப்பிடப்பட்டு, அதிலும் அது தொடர்பாக அறிவிக்கும் கடிதத்திலும் நகர அதிகாரம்பெற்ற அலுவலரின் ஒப்பம் பெற்றுக்கொள்ளுதல் | திட்டமிடல் குழு கூடிய திகதியிலிருந்து இரண்டு நாட்களுக்குள் | விடயபொறுப்பு அலுவலர் |
| ஒப்பமிடப்பட்ட கடிதம் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முன்னலுவலகத்திடம் அனுப்பி வைக்கப்பட்டு, கடித ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறு விண்ணப்பத்தாரியிடம் அறிவுறுத்தல் | திட்டமிடல் குழு கூடிய திகதியிலிருந்து இரண்டு நாட்களுக்குள் | விடயபொறுப்பு அலுவலர் |
| உரிய கடித ஆவணங்களை விண்ணப்பத்தாரியிடம் ஒப்படைத்தல் | விண்ணப்பத்தாரி வருகை தந்தால் , அந்த சந்தர்ப்பத்தில் அல்லது தபாலில். | முன்னலுவலக அலுவலர் |

குறிப்பு:- இங்கு அதிகாரம் பெற்ற அலுவலர் என்பதில், நகர அபிவிருத்தி அதிகார சபையால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நபரை குறிக்கப்படும்.

## 7. இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாவிடின் ஏற்படும் விளைவுகள்

உரிய இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலம் முடிவடைந்த பின்னர், அந்த அபிவிருத்தி பணிகள் அத்துமீறல் கட்டுமானமாக கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துமீறல் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்கையில் அதற்கு எதிராக நீதிமன்ற செயற்பாடுகளுக்கு உட்படுதல் வேண்டும்.